முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

ந.க.எண். 52/10 நாள் : – 01.06.2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–11

## நாடு தழுவிய ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் மத்திய அரசு அல்லது மாநிலஅரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்கவேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2ல் தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகள் வழங்கப்படும்.

2. முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சியில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்கு உரிய ஒப்பந்தப் படிவங்களை 01.06.2010 முதல் 16.06.2010 பிற்பகல் 5.00 மணி வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை முக்கூடல் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தபுள்ளி படிவங்களை கணிணி மூலம் On line Website மூலம் பெற்று கொள்ளளாம்.

4. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ, அல்லது வரைவோலையாகவோ செயல்அலுவலர் முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்படவேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகளை முக்கூடல் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 17.06.2010 தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் முக்கூடல் பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகைதந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை |
|---|---|---|---|---|
| 1 | **தார்சாலை அமைத்தல்**<br>சடையப்பபுரம் இணைப்பு தார்சாலையை அகலப்படுத்தி தார்சாலையாக அமைத்தல். | 10.00 | 10000/- | 6240/- |
| 2 | **சமுதாய நலக்கூடம் அமைத்தல் அரசாணை பகுதி 6 (ii) ன்படி மாற்றுப்பணி**<br>முக்கூடல் பேரூராட்சி சிங்கம் பாறை பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல். | 10.00 | 10000/- | 6240/- |
| 3 | **ஊரணி குளம் குட்டை / பூங்கா மேம்பாடு அரசாணை பகுதி 6 (ii) ன்படி மாற்றுப்பணி**<br>முக்கூடல் பேரூராட்சி மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி முதல் ஆலங்குளம் மெயின்ரோடு அண்ணாநகர் வரை குடிநீர் பைப் லைன் பதித்தல். | 5.00 | 5000/- | 3120/- |
| 4 | **குடிசைப்பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல்**<br>5–வது வார்டு அண்ணா நகரில் சிமிண்ட் தளம் அமைத்தல். | 9.00 | 9000/- | 3120/- |
| 5 | **பேரூந்து நிலையம் / நாளங்காடி / சந்தை மேம்பாடு**<br>பேரூராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்புறமாக வணிக வளாகம் கட்டுதல். | 6.00 | 6000/- | 3120/- |
| | பேரூராட்சி அலுவலகத்தின் தெற்கு பகுதியில் பூங்கா அமைத்தல் | 4.00 | 4000/- | 3120/- |
| 6 | **சுடுகாடு / இடுகாடு மேம்பாடு செய்தல்**<br>சடையப்பபுரத்தில் மயானம், கலியன்குளம் மயானம் மற்றும் முக்கூடல் மயானம் ஆகியவற்றில் எரிகூடம் அமைத்தல். | 5.75 | 5750/- | 3120/- |
| 7 | **பேரூராட்சியின் விருப்படியான அத்தியாவசிய பணிகள்**<br>வடக்கு குமாரசாமி புரம், கக்கன் தெரு மற்றும் பிளாத் ஓடை ஆகிய இடங்களில் வாறுகால் கட்டி சிறுபாலம் அமைத்தல் | 7.50 | 7500/- | 3120/- |
| | **மொத்தம்** | **57.25** | | |

# நிபந்தனைகள்

1. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்கவேண்டும்.

2. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் போது ஒப்பந்தக்காரரின் நிதிநிலைமை பொருளாதார நிதிநிலை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். ஒப்பந்தக்காரர்களாக உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்திருத்தல் வேண்டும்.

# சிறப்பு நிபந்தனைகள்

3. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த மூன்று ஆண்டுகளில் 2006 – 2007 முதல் 2009 – 2010 வரை குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல்திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கவேண்டும்.

4. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருட்களை ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் , அனைத்துப் பொருட்களும் I. S. I தரம் கொண்டதாக வாங்கி பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தை குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன்சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல்வேண்டும். கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5 % செலுத்தப்படவேண்டும்.

6. சப்ளை செய்யும் நிறுவனம் விநியோகிஸ்தர் (Distributor) என்பதற்கான சான்று தரவேண்டும்.
7. சப்ளை செய்யும் சாமான்களுக்கு தர உறுதி சான்று (Gurantee Certificate) வழங்கப்பட வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி உதவி செயற்பொறியாளர் பரிந்துரை பெற்ற பின் முக்கூடல் பேரூராட்சி மன்றத்தின் அனுமதி பெற்ற பின்பு வேலை உத்திரவு வழங்கப்படும்.
9. சப்ளை செய்யப்பட்ட பொருட்களுக்கு பட்டியல்படி திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அனுமதி பெற்று தொகை பட்டுவாடா செய்யப்படும்.
10. டெண்டர் பெறப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் பெற்றுத் திறக்கப்படும்.
11. மேற்கண்ட பணிகள் முடிக்கப்படும் நிலையில் சம்பந்தப்பட்ட உயர்அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.
12. இதர விபரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**செயல்அலுவலர்,**
**தேர்வு நிலை பேரூராட்சி,**
**முக்கூடல்.**

**பெறுநர்**

அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்

**<u>நகல் :-</u>**

1. உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்) திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவிசெயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) திருநெல்வேலி.
3. உதவிப் பொறியாளர், மணிமுத்தாறு பேரூராட்சி.
4. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி , பாப்பாக்குடி, ஆலங்குளம்.
5. செயல்அலுவலர், சேரன்மகாதேவி , ஆலங்குளம், அம்பாசமுத்திரம் 3ம் நிலை நகராட்சி, விக்கிரமசிங்கபுரம், ஆழ்வார்குறிச்சி, வீரவநல்லூர் பேரூராட்சி,
6. இயக்குனர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை – 108 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
7. தலைவர், முக்கூடல் தேர்வு நிலை பேரூராட்சி
8. துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், முக்கூடல் பேரூராட்சி மன்றம்.
9. சார்பதிவாளர் அலுவலகம், முக்கூடல்.
10. நூலகர், பொது நூலகம். முக்கூடல்.
11. அலுவலக விளம்பர பலகை.